# தேவகோபம்

## எங்கு போய்விட்டது இந்த இறையியல் போதனை?

ஆர். பாலா

RP
REFORMED PUBLICATIONS
சீர்திருத்த வெளியீடுகள்

**தேவகோபம்:**
**எங்கு போய்விட்டது இந்த இறையியல் போதனை?**

*ஆர். பாலா*

*முதல் பதிப்பு:* *ஜனவரி* 2019

***சீர்திருத்த வெளியீடுகள்***
6/87 *காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை* 600023.
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைபேசி:* +91 9445671113
*ஈமெயில்:* msjamesin@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த*
*மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.org
*வலைப்பூவைப் பார்க்கவும்.*

# நூலைப்பற்றி சில வார்த்தைகள் . . .

கர்த்தரைப்பற்றிய சத்தியங்களில் நாம் தவறான எண்ணங்களைக் கொண்டிருப்போமானால், வேதத்தின் சகல போதனைகளைப் பற்றியும் நாம் தவறான முடிவுகளுக்கே வரநேரிடும். உதாரணத்திற்கு கிறிஸ்துவின் பாவநிவாரணபலி (Atonement) கர்த்தரைப்பற்றிய அனைத்து சத்தியங்களோடும் பிரிக்கமுடியாதபடி இணைந்து காணப்படுகிறது. கிறிஸ்து தன் பாவநிவாரணபலி மூலம் நிறைவேற்ற வேண்டிய பல அடிப்படை அம்சங்கள் இருந்தன. அதன் மூலம் கர்த்தருடைய நீதி நிலைநாட்டப்பட வேண்டும்; அவருடைய அன்பு முழுமையாகவும், ஆழமாகவும் வெளிப்படுத்தப்பட வேண்டும்; பாவியாகிய மனிதன் மேலிருக்கும் தேவகோபம் அகற்றப்பட வேண்டும்; அதுநிறைவேற கிறிஸ்து தேவகோபத்தையும், அப்பாவங்களையும் தன் மேல் சுமந்து ஒரே பலியாகத் தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும். இந்தச் சத்தியங்களனைத்தும் ஒன்றோடொன்று பொருந்தி பிரிக்கமுடியாதபடி தொடர்புள்ளவையாக இருக்கின்றன. இந்தச் சத்தியங்களில் ஒன்றைச் சிறிதளவு மாற்றியமைத்தாலும் அது அனைத்து சத்தியங்களையும் பாதித்து பாவநிவாரணபலியைப்பற்றிய வேதசத்தியத்தைச் சிதைத்துவிடும்.

வேதம் போதிக்கும் தேவகோபமாகிய சத்தியம் (The Wrath of God) வேதம் முழுவதும் பரவிக்காணப்படுகின்றது. இந்த சத்தியத்தை அசட்டை செய்பவர்களும், நிராகரிப்பவர்களும் வரலாற்றில் பல்லாண்டுகாலம் இருந்துவந்திருக்கிறார்கள்;

இன்றும் இருக்கிறார்கள். கர்த்தரைக் கோபமுள்ளவராக வேதம் வர்ணிப்பது இவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவரை அன்புள்ளவராகவும், மன்னிக்கிறவராகவும் மட்டுமே இவர்கள் காண்கிறார்கள். இதுபற்றிக் குறிப்பிடும் இருபதாம் நூற்றாண்டு போதகரும், எழுத்தாளருமான A. W. பின்க் (A. W. Pink), "வேதத்தில் கர்த்தருடைய அன்பையும் கனிவையும்விட அவருடைய கோபம், ஆக்ரோஷம் ஆகியவற்றை விளக்கும் வசனங்களே அதிகமாக இருக்கின்றன" என்கிறார்.

பாவத்திற்கெதிரான கர்த்தரின் பரிசுத்தமான கோபத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தால் வேதத்தை நம்மால் புரிந்துகொள்ளவே முடியாது. அந்தளவுக்கு இது வேதம் போதிக்கும் அவசியமான கர்த்தரைப் பற்றிய சத்தியம். தேவகோபமில்லாதவராக கர்த்தரைக் காண முயல்வது அவரை வெறும் உயிரற்ற சிலையாக்கிவிடும் உருவவழிபாடு மட்டுமே. கர்த்தரின் பாதத்தை அடைந்துவிட்ட தற்கால இறையியலறிஞரான R. C. ஸ்பிரவுல் (R. C. Sproul), "மனிதன் ஐந்து நிமிடங்கள் அமைதியாக இருந்து சிந்தித்துப் பார்த்தானெனில் கர்த்தரைக் கோபமில்லாதவராகக் கணிக்கும் தன்னுடைய தவறை உணர்வான்" என்கிறார். "கர்த்தர் பரிசுத்தராக இருந்தால், அவருடைய தன்மையில் ஒரு அவுன்ஸாவது நீதியிருந்தால், கர்த்தர் கர்த்தராக இருப்பாரானால், நம்மீது கோபப்படாமல் அவரால் எப்படி கர்த்தராக இருக்க முடியும்?" என்று அறைகூவலிடுகிறார் ஸ்பிரவுல். அவர் தொடர்ந்து, "அவருடைய பரிசுத்தத்தை நாம் மீறுகிறோம், அவருடைய நீதியை நாம் கேலி செய்கிறோம், அவருடைய கிருபையை நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளுகிறோம். இதெல்லாம் நிச்சயம் அவருக்குப் பிடித்தமானவையாக இருக்காது. . . . ஆனால், அன்புருவான கர்த்தர் கோபமில்லாதவராக இருந்தால் அவர் கடவுளாக இருக்கமுடியாது. கல்லிலிருந்து வெட்டி நாம் உருவாக்கியுள்ள ஒரு சிலையாக மட்டுமே அவர் இருக்கமுடியும்" என்கிறார் ஸ்பிரவுல். இவ்வார்த்தைகள் எத்தனை உண்மையானவை. நியாயத்தீர்ப்பின் நாளில் கர்த்தருடைய மகிமையுள்ள, ஆக்ரோஷமான கோபம் அதனுடைய சகல உக்கிரத்தன்மையோடும் வெளிப்படத்தான் போகிறது.

இந்நூல் வேதம் விளக்குகின்ற தேவகோபமாகிய இறையியல் போதனையை முறைப்படுத்தி ஆராய்ந்து விளக்குகின்றது. வரையறுக்கப்பட்ட அல்லது முறைப்படுத்தப்பட்ட இறையியல் போதனைகள் நமக்கு அவசியம் தேவை. வேதம் முழுவதிலும் கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கும் சத்தியங்களை முறையாகத் தொகுத்து ஒவ்வொரு சத்தியத்தைப் பற்றியும் அதன் முழுவிபரங்களையும் தருவது முறைப்படுத்தப்பட்ட இறையியலின் பங்கு. இதன் மூலம் நாம் வேத சத்தியங்களைப் பற்றிய பரந்த தெளிவான அறிவைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. 1689 விசுவாச அறிக்கை இதற்கு நல்ல உதாரணம். அது வேதசத்தியங்களை முறைப்படுத்தி ஒழுங்கமைத்து நமக்குத் தருகின்றது. அந்தவகையில் வேதம் போதிக்கின்ற முக்கிய சத்தியமான தேவகோபத்தையும் அதோடு தொடர்புடைய சத்தியங்களையும் ஆராய்ந்து இந்த நூலை வெளியிட்டிருக்கிறேன்.

இந்நூலின் முதலாவது ஆக்கத்தை நான் முதலில் எழுதினேன். Propitiation என்ற ஆங்கில வார்த்தை தமிழ்வேதத்தில் சரியாக மொழிபெயர்க்கப்படாததையும், கிருபாதாரபலி என்று தமிழ் வேதத்தில் காணப்படும் வார்த்தை, Propitiation என்ற ஆங்கில வார்த்தை விளக்குகின்ற, தேவகோபத்தை கிறிஸ்து தன்மேல் சுமந்து தம்மைப்பலியாகக் கொடுத்து பாவிகள் மேலிருக்கும் தேவகோபத்தை அகற்றியதை வெளிக்கொணராமல் இருப்பதையும் இந்த ஆக்கத்தில் விளக்கி, அந்த வார்த்தைக்கான சரியான மொழிபெயர்ப்பு கோபநிவாரணபலி என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்த கோபநிவாரணபலி (Propitiation) வேதத்தில் காணப்படும் மிக முக்கியமான வார்த்தை. இதை விளங்கிக்கொள்ளுவது கிறிஸ்துவின் பாவநிவாரணபலி பற்றிய ஆழமான உண்மைகளை விளங்கிக்கொள்ள பெரிதும் துணைசெய்யும். கோபநிவாரணபலி பற்றிய இந்த முதலாவது ஆக்கமே தேவகோபத்தைப் பற்றிய வேதவிளக்கங்களைத் தொகுத்து ஏனைய அதிகாரங்களை எழுதவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது.

தேவகோபம் பற்றிய தெளிவான வேதபோதனைகள் நம்மினத்தில் பரவலாக இல்லாதிருப்பதை நான் கவனித்திருக்கிறேன். மேலை நாடுகளில் லிபரல் கோட்பாடுகளின் பரவலால்

லிபரல் இறையியலாளர்கள் மட்டுமல்லாது சில சுவிசேஷ இயக்கத்தைச் சேர்ந்த இறையியலாளர்களும் தேவகோபத்தை நிராகரித்துப் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் தேவனுடைய அன்பைத் தவறாகப் புரிந்துகொண்டு, அன்பின் தேவனில் கோபம் இருக்க வழியில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த C. H. டொட் (C. H. Dodd) இதில் முதன்மையானவர்.

ரொபட் சுளர் (Robert Schuller) என்ற அமெரிக்க பிரசங்கி, “நாம் கர்த்தரின் சாயலைப்பற்றிய நம்முடைய எண்ணங்களை அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பதால், . . . அவிசுவாசிகள் கர்த்தர் அன்பில்லாதவர் என்றும், கோபமுள்ளவர் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்” என்று குறிப்பிட்டிருப்பதாக சீர்திருத்த இறையியல் அறிஞரான ரொபட் ரேய்மன்ட் (Robert Reymond) எழுதியிருக்கிறார். டொட்டிலிருந்து சூளர்வரை தேவகோபத்தை நிராகரிக்கிறவர்கள் அதிகரித்திருக்கிறார்கள். அதன் காரணமாக கோபநிவாரணபலி (Propitiation) என்ற வார்த்தையில் தேவகோபம் வெளிப்படுத்தப்படுவதால் அதைமாற்றி வேறு வார்த்தைகளை RSV, NEB போன்ற வேதமொழிபெயர்ப்புகள் பயன்படுத்துகின்றன. தமிழ்வேத (OV) மொழிபெயர்ப்பிலும் இந்தக்குறையைத்தான் காண்கிறோம்.

தேவகோபம் கர்த்தரைப் பற்றிய மிகவும் முக்கியமான போதனை; அது கர்த்தத்துவத்தின் ஒரு பகுதி. அவருடைய பரிசுத்தத்தின் மறுபக்கம்; அதாவது அவருடைய பரிசுத்தம் பரிசுத்தமற்றவைகளை வெறுத்து அழிக்கும் தன்மையையும் கொண்டிருக்கிறது. தேவகோபம் அவருடைய நீதியின் மறுபக்கம். நீதியை நிலைநாட்ட கர்த்தர் அநீதியை வெறுத்து கோபத்தோடு அதை அழிக்கிறவராக இருக்கிறார். பாவம், நீதிமானாக்குதல், மகவேட்பு, இரட்சிப்பு, விசுவாசம், மனந்திரும்புதல், பரிசுத்தமாகுதல், நியாயத்தீர்ப்பு, நித்திய நரகம் போன்ற அனைத்துப் போதனைகளோடும் தொடர்புடைய, தள்ளிவைத்துவிட முடியாத அவசியமான போதனையாக தேவகோபம் காணப்படுகிறது. தேவகோபத்தை ஒதுக்கி வைத்துவிட்டு பாவத்தைப் பற்றியோ, நீதிமானாக்குதல் பற்றியோ, மகவேட்பு

பற்றியோ, இரட்சிப்பு பற்றியோ, நியாயத்தீர்ப்பு பற்றியோ விளக்க வழியில்லை. தேவகோபத்தைத் தொடாமல் இந்த விஷயங்களில் கொடுக்கப்படும் எந்த விளக்கமும் முழுமையான, பரிசுத்தமான வேதபோதனையாக இருக்கமுடியாது. சத்தியத்தை மாற்றிப் போதிப்பதும், சிதைப்பதும் கர்த்தரை அவரிருக்கும் விதத்தில் விளக்காமல் உருமாற்றி விளக்குகிற காரியமாகும். அதை வேதம் சிலைவணக்கத்திற்கு ஒப்பிடுகிறது. உருவவழிபாட்டை வெறுக்கிற தேவன் தன்னைப் பற்றிய சத்தியங்கள் முரண்பாடானவிதத்தில் விளக்கப்படுவதை எந்தளவுக்கு வெறுப்பார் என்பதை ஒருதடவை எண்ணிப்பாருங்கள்.

தேவகோபத்தைப்பற்றி இன்று விளக்கிப் போதிப்பவர்களும், பிரசங்கிப்பவர்களும் நம்மினத்தில் அரிதாகக் காணப்படுவதற்கு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. தேவன் அன்புள்ளவர் என்று நம்புகிறவர்களால் அவர் தணியாத கோபமுள்ளவராகவும் இருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அன்பும், கோபமும் ஒரே இடத்தில் இருக்க முடியும் என்பதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. இத்தகைய மனக்கண்ணோட்டத்தால் அவர்கள் வேதம் கர்த்தரைப் பற்றி விளக்குகிற இந்த உண்மையைப் பிரசங்கிப்பதைத் தவிர்த்துவிடுகிறார்கள். இந்நூலில் வந்திருக்கும் அதிகாரங்களில் தேவன் கோபமுள்ளவர் என்று வேதம் ஆணித்தரமாகப் போதிக்கிறது என்பதை நான் முடிந்தவரையில் தெளிவாக விளக்கியிருக்கிறேன். வாசகர்களாகிய நீங்கள் உங்கள் வேதப்புத்தகத்தையும், மனதையும் கர்த்தருக்கு முன் திறந்துவைத்து இந்த உண்மைகளை ஆராய்ந்து பாருங்கள். நமக்குப் பிடிக்கிறது, பிடிக்கவில்லை என்ற அனுமானத்தோடு ஒருநாளும் நாம் வேதத்தை ஆராயக்கூடாது. வேதம் சொல்லுவதே உண்மை என்ற அடிப்படை நம்பிக்கையோடு அது விளக்குவதை சிந்தித்துப் பார்த்து ஏற்றுக்கொள்வதே நல்ல கிறிஸ்தவனுக்கு அடையாளம்.

இந்நூலின் 2வது அதிகாரம் வரலாறு நமக்குத் தந்திருக்கும் 1689 இலண்டன் பாப்திஸ்து விசுவாச அறிக்கையும், பாப்திஸ்து சுருக்க வினாவிடையும் தேவகோபத்தை விளக்குகின்றவிதத்தை ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இருக்கிறது. இதை நான் விளக்கியிருப்பதற்குக் காரணம், 16ம் நூற்றாண்டு சீர்த்திருத்த

கிறிஸ்தவர்களும், 17ம் நூற்றாண்டு பியூரிட்டன் கிறிஸ்தவர்களும் வேதம் போதிக்கும் தேவகோபத்தை எந்தளவுக்கு விசுவாசித்து விளக்கியிருக்கிறார்கள் என்பதை வாசகர்கள் உணரவேண்டும் என்பதற்காகத்தான். பழைய ஏற்பாட்டு விசுவாசிகளும், கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும், முதல் நூற்றாண்டு ஆதிசபை விசுவாசிகளும், அதற்குப் பின்வந்த 16, 17ம் நூற்றாண்டு காலங்களிலும் எவரும் நிராகரித்திராத வேத சத்தியமாகிய தேவகோபத்தை நிராகரிப்பதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது?

3வது அதிகாரத்தில், வேதம் தேவகோபத்தை எங்கெல்லாம் விளக்கியிருக்கிறது என்பதை ஆராய்ந்து தந்திருக்கிறேன். இதை ஆரம்பத்தில் என்னுடைய சபையில் பிரசங்கம் செய்திருக்கிறேன்.

4வது அதிகாரம் தேவகோபத்தை நிராகரிப்பது எந்தளவுக்கு வேதத்தின் ஏனைய அடிப்படை இறையியல் போதனைகளை யெல்லாம் பாதித்துவிடும் என்பதையும், தேவகோபத்துடன் அந்த சத்தியங்களுக்குள்ள தொடர்பையும் விளக்குகின்றது.

5வது அதிகாரம் நரகத்தில் காணப்படும் கர்த்தரின் பிரசன்னத்தை விளக்குகிறது. 6வது அதிகாரம் இறையியலறிஞர்கள் தேவகோபத்தைப்பற்றி விளக்கியிருக்கும் உண்மைகளைக் கொண்டிருக்கிறது.

இந்நூலின் பின் இணைப்பாகத் தரப்பட்டிருக்கும் அதிகாரம் பேராசிரியர் ஜோன் மரே (John Murray) அவர்களின் ஆக்கம். கிறிஸ்துவின் மீட்பின் நிறைவேற்றத்தையும், அதன் நடைமுறைப்படுத்தலையும்குறித்து அவர் எழுதிய நூலின் முதல் அதிகாரமே இது. இந்த ஆக்கத்தை நான் இணைத்திருப்பதற்குக் காரணம் இருக்கிறது. தணியாத தெய்வீகக் கோபத்தைக் கொண்டிருக்கும் கர்த்தர் அன்புருவானருங்கூட. அவருடைய கோபம் எந்தளவுக்கு சத்தியமானதோ அதேவிதத்தில் அவருடைய அன்பும் சத்தியமானது. அவருடைய அன்பு அவருடைய கோபத்துக்கு எதிரானதல்ல. ஆகவே, இந்த நூலில் 4வது அதிகாரத்தில் தேவனுடைய அன்பைப்பற்றி எழுதலாம் என்று சிந்தித்தபோது மரேயின் இந்த ஆக்கம் என் நினைவுக்கு வந்தது. இதில் அவர் அருமையாக, தேவனுடைய அன்பே கிறிஸ்துவின் பாவநிவாரணபலிக்கு அடிப்படைக் காரணமென்று

கர்த்தரின் அன்பைப் பற்றி ஆழமாக விளக்கி எழுதியிருக்கிறார். இந்தவிதத்தில் நம்மினத்தில் அநேகர் கர்த்தரின் அன்பைபற்றி சிந்தித்துப் பார்ப்பதில்லை. அவருடைய அன்பை நாம் கொச்சைப்படுத்தியிருக்கிறோம்; வேதம் விளக்கும்விதத்தில் அதைப்பற்றி சிந்திப்பதோ, உணர்வதோ இல்லை. கர்த்தரின் அன்பைப்பற்றிய வேத எண்ணங்களைக் கொண்டிருக்க இந்த ஆக்கம் உதவும் என்று நம்புகிறேன்.

இந்த நூல் தேவகோபம் பற்றிய போதனைகளை இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடிய விதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இருந்தபோதும் இவற்றை ஆராய்ந்து, சிந்தித்துப் பார்த்து, விசுவாசித்து, கர்த்தரைப் பற்றிய நம்முடைய எண்ணங்கள் வேதபூர்வமாக இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதை வெளியிடும் சென்னையைச் சேர்ந்த சீர்திருத்த இறையியல் பதிப்பகத்திற்கும், அதை நிர்வகிக்கும் சகோதரர் ஜேம்ஸுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அட்டைப்படம் முதல் அச்சிட்டு முடியும்வரை அனைத்து வேலைகளையும் அவரே செய்திருக்கிறார். எல்லா மகிமையும் கர்த்தரையே சாரட்டும்.

# பொருளடக்கம்

*1.* கிருபாதாரபலியா, கோபநிவாரணபலியா? ........................ 13

*2.* வேதத்தில் தேவகோபம் ........................................................ 31

*3.* *1689* விசுவாச அறிக்கையிலும்,
வினாவிடைப் போதனையிலும் தேவகோபம் .................... 63

*4.* தேவகோபமும் இறையியல் சத்தியங்களும் ........................ 85

*5.* நரகத்தில் கர்த்தரின் பிரசன்னம் ....................................... 109

*6.* தேவகோபம்: இறையியலறிஞர்கள் சொன்னவை! .......... 123

*7.* பின் இணைப்பு .................................................................. 133

பாவநிவாரணபலியை அவசியமாக்கியது எது? ............. 135

# கிருபாதாரபலியா, கோபநிவாரணபலியா?

வார்த்தைகள் முக்கியமானவை. நம்முடைய எண்ணங்களை வெளியிட வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோம். எண்ணங்களைத் தெளிவாக விளக்குவதற்கு தகுந்த வார்த்தைகள் அவசியம். வார்த்தைகள் சரியானதாக இல்லாவிட்டால் நாம் வெளிப்படுத்தும் எண்ணங்கள் தவறான கருத்தைக் கொடுத்துவிடும் ஆபத்து இருக்கிறது. தகுந்த வார்த்தைகளை, நாம் வெளிப்படுத்த விரும்பும் எண்ணங்களுக்கேற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தும் அவசியத்தை பொதுவாக எல்லோரும் அறிந்திருப்பார்கள். நடைமுறை வாழ்க்கையில் இந்தளவுக்கு மொழியைப் பொறுத்தவரையில் நாம் வார்த்தைகளில் கவனம் செலுத்துகிறபோது, நாமறிந்துகொள்ளும்படி தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கும் தன்னுடைய வேதத்தில் கர்த்தர் எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து வார்த்தைகளை வெளிப்படுத்தியிருப்பார்? தம்முடைய சித்தம் தெளிவாக, நாம் புரிந்துகொள்ளும்படி இருக்கவேண்டுமென்பதற்காக நிச்சயம் கவனத்தோடு தெரிந்தெடுத்து வார்த்தைகளைப் பயன்படுத்தியிருப்பார். அதுவும் வேதம் பரிசுத்த ஆவியினால் விசேஷமான முறையில் ஊதி அருளப்பட்டதாக இருக்கிறது. வேதத்தை எழுதி முடிக்க தேவ மனிதர்களைப் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தியிருந்தபோதும், தவறு அறவேயில்லாமல் அவர்கள் வேதத்தை எழுதும்படிச் செய்தார். பரிசுத்த

ஆவியானவர் பூரணபரிசுத்தராக இருப்பதால் அவருடைய எழுத்துக்களும் பூரணபரிசுத்தம் வாய்ந்ததாகவே இருக்கும். வேதத்தில் அது போதிக்கும் சத்தியங்கள் மட்டுமல்லாமல் அவற்றை வெளிப்படுத்தும் மொழியும், வார்த்தைகளும்கூட பூரணமானவையாகக் காணப்படுகின்றன. அதாவது. வேதம் எபிரெய, கிரேக்க மொழிகளில் எழுதித் தரப்பட்டு காணப்படும் மூலச் சுருள்களில் அந்தவகையில் கர்த்தரின் வேதம் பூரணமானதாகக் காணப்படுகின்றது. இந்த மூலச் சுருள்களில் இருந்தே வேதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நம்மை வந்தடைந்திருக்கிறது.

இத்தனைப் பீடிகையோடு இதையெல்லாம் ஏன் எழுதிக்கொண்டிருக்கிறேன் என்று கேட்கிறீர்களா? அதற்குக் காரணம் முக்கியமான ஒரு வேத போதனையை நான் இப்போது உங்களுக்கு விளக்க முன்வந்திருப்பதால்தான். அந்தப் போதனை கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு அடித்தளமாக இருக்கும் ஒன்று. அந்தப் போதனையை விளக்குவதற்கு கர்த்தர் தன்னுடைய வேதத்தில் ஒரு முக்கியமான வார்த்தையைத் தெரிந்து பயன்படுத்தியிருக்கிறார். அந்த வார்த்தை மூல மொழியான கிரேக்கத்தில் இருந்து தமிழ் வேதத்தில் “கிருபாதாரபலி” என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் அது Propitiation என்று அழைக்கப்படுகிறது. இந்த வார்த்தைக்குள் கிறிஸ்துவின் பாவநிவாரணபலி பற்றிய ஆழமானதும், அவசியமானதுமான சத்தியங்கள் பொதிந்து காணப்படுகின்றன. அதன் காரணமாகத்தான் இந்த வார்த்தை முக்கியமானது என்று சொன்னேன்.

இந்த வார்த்தையை முதலாம் யோவான் 4:10ல் காண்கிறோம்.

> “நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.”

கிறிஸ்து நமக்காக கிருபாதாரபலியானார் என்று இந்த வசனம் சொல்லுகிறது.

கிறிஸ்துவின் மீட்பாகிய பணியில் அடங்கியுள்ள உண்மைகளை விளக்கும் பலவகையான வார்த்தைகள் வேதத்தில் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு “மீட்பு” (Redemption) என்ற வார்த்தை பல தடவைகள் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாவிகளுக்கு விடுதலை கொடுப்பதற்காக கிறிஸ்து ஏற்றிருக்கும் பெரும் பணியையும் அந்தப் பணியில் அடங்கியிருக்கும் அருஞ்செயல்களையும் இந்தப் பதம் விளக்குகிறது. இதேபோல் “பாவநிவாரணபலி” (Atonement) என்ற வார்த்தையையும் பழைய ஏற்பாட்டில் பெரும்பாலும் காண்கிறோம். பழைய ஏற்பாட்டு பலிகளை நினைவுபடுத்துமுகமாக கிறிஸ்து தன்னையே பலியாகக் கொடுத்ததை இந்தப் பதம் விளக்குகிறது.

கிறிஸ்து நமக்காக செய்திருக்கும் சிலுவைத் தியாகத்தை விளக்கும் இன்னொரு வார்த்தை “ஒப்புரவாக்குதல்” (Reconciliation). இவையும் இவைபோன்ற ஏனைய பதங்களும் கிறிஸ்துவின் மீட்புப்பணியின் அருஞ்செயல்களை விளக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வார்த்தைகளை நாம் நம்முடைய அன்றாட உரையாடலில் பயன்படுத்துவதில்லை. ஞாயிறு பாடசாலைகளில் சிறுவர்களுக்கு நிச்சயம் விளக்குவ தில்லை. இந்த வார்த்தைகள் முக்கியமானவை. கர்த்தரே தெரிந்தெடுத்து இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் மீட்பைப் பற்றி விளக்கும் இந்தப் பதங்கள் ஒரே விஷயத்தை விளக்குவதில்லை. அதாவது ஒரே விஷயத்தை விளக்கும் பல வார்த்தைகளாக இவற்றைக் கருத்தில் கொள்ளக்கூடாது. அப்படித்தான் அநேகர் இவற்றைப் பயன்படுத்தி வருகிறார்கள். மாபெரும் மீட்பாகிய கிறிஸ்துவின் அருஞ்செயலில் அடங்கியுள்ள வெவ்வேறு சிறப்பான அம்சங்களை ஒவ்வொரு பதமும் விளக்குகின்றது. உதாரணத்திற்கு “மீட்பு” என்ற பதம் பாவிகளுக்கு கிறிஸ்து ஏற்படுத்தித் தந்திருக்கும் பெரும் ஆத்மீக விடுதலையை விளக்குவதாக இருக்கிறது. இன்னொரு பதமான “பாவநிவாரணபலி” மீட்பின் ஓர் அங்கமான கிறிஸ்துவின் சிலுவைப் பலியை சிறப்பாக விளக்குகிறது. இன்னொரு பதமான “ஒப்புரவாக்குதல்” மீட்பாகிய பெருஞ்செயலின் இன்னொரு அங்கமான கிறிஸ்துவின் மூலம் பாவி விடுதலை

அடைந்து கர்த்தரோடு சமாதானத்தை அடைதலை சிறப்பாக விளக்குகிறது.

இந்தவகையில் Propitiation (கிருபாதாரபலி) என்ற பதமும் விசேஷமானது. உண்மையில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை முறையாக விளங்கிக்கொள்ள இந்தப் பதம் அவசியமாக இருக்கிறது. இந்தப் பதத்தை நாம் விளங்கிக்கொள்ளுகிற விதத்திலேயே சுவிசேஷத்தைப் பற்றிய நம்முடைய நம்பிக்கைகள் காணப்படும். இந்தப் பதத்தை சரியாக விளங்கிக்கொள்ளாவிட்டால் திரித்துவ தேவனைப் பற்றிய நம்முடைய நம்பிக்கைகளிலும் மாற்றமேற்பட்டுவிடும். அதுமட்டுமல்லாமல் இந்தப் பதம் போதிக்கும் ஆழ்ந்த உண்மைகளை அறியாமலிருப்பது நம்முடைய வேத நம்பிக்கைகளையும், கிறிஸ்தவ விசுவாசத்தையும் பலவீனப்படுத்திவிடும்.

*1 யோவான் 4:10*ஐ இப்போது ஆராய்வோம்.

> நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

இந்தப் பகுதியில் யோவான் முக்கியமாக கடவுளுக்கு நம்மீதிருக்கும் அன்பையும் அந்த அன்பின் அடிப்படையில் நாம் ஒருவருக்கொருவர் காட்டவேண்டிய அன்பையும் விளக்குகிறார். இந்தப் பகுதி அமைந்து காணப்படும் சந்தர்ப்பம் அதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. யோவான், “இங்கே பாருங்கள், இதுதான் அன்பு – இயேசு கிறிஸ்து நமது கிருபாதாரபலி” என்கிறார். அன்பு என்ன என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமா? அதை இயேசு கிறிஸ்து நமது கிருபாதாரபலியானதில் காண்கிறோம் என்கிறார் யோவான்.

இங்கே பேராச்சரியம் தருகின்ற விஷயம் என்ன தெரியுமா? அன்புக்கும், கிருபாதாரபலிக்குமிடையில் யோவான் ஏற்படுத்துகின்ற தொடர்புதான். இந்த இரண்டையும் யோவான்

*இணைக்கிறார். கடவுளுக்கு தன் மக்கள் மீதிருக்கும் அன்பை, அவர் கிறிஸ்துவை அவர்களுக்கு கிருபாதாரபலியாக்கியதன் மூலம் பூரணமாக வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதே யோவானின் போதனை. இது எனக்கு பேராச்சரியமளிப்பதற்கு காரணம் என்ன தெரியுமா? இப்போதெல்லாம் இந்த இரண்டும் ஒன்று சேர முடியாதென்பதையே நாம் தொடர்ந்தும் கேட்டுவருவதால்தான். இறையியல் அறிஞர்களும், பிரசங்கிகளும் இப்படித்தான் விளக்கி வருகிறார்கள். அன்பும், கிருபாதாரபலியும் இணைவதற்கு வழியே இல்லை என்று சொல்லி வருகிறவர்கள், அவற்றை இணைப்பதற்காக கிருபாதாரபலி என்ற வார்த்தையைக் கொஞ்சம் மாற்றி அமைத்திருக்கிறார்கள். (இதை நான் பின்னால் விபரமாக விளக்கவிருக்கிறேன்.) ஆனால் யோவானுக்கோ, கடவுளுக்கு தன் மக்கள் மீதிருக்கும் அளப்பரிய அன்பை அவர்களுக்காக கிறிஸ்து கிருபாதாரபலியானதிலேயே தெளிவாகப் பார்க்க முடிந்திருக்கிறது. யோவானைப் பொறுத்தவரையில் கிருபாதாரபலி, அதில் அடங்கியிருக்கும் அத்தனை அம்சங்களோடும் மாறாமல் இருந்தால் மட்டுமே அதில் கடவுளின் மெய்யான அன்பைப் பார்க்க முடியும்.*

### *1. கிருபாதாரபலி எனும் வார்த்தைக்கான அர்த்தமும் அது பயன்படுத்தப்பட்டிருக்கும் முறையும்.*

*இந்த வார்த்தையை நாம் 1 யோவான் 4:10ல் மட்டும் காண்பதில்லை. புதிய ஏற்பாட்டில் வேறு சில இடங்களிலும் இதைக் காண்கிறோம். இந்த இடங்களில் இது பெயர்ச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அத்தகைய மூன்று வேதப் பகுதிகளைக் கவனிப்போம்.*

*1 யோவான் 2:2*

> *“நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற **கிருபாதாரபலி** அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.”*

*ரோமர் 3:26*

*"கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் **கிருபாதாரபலியாக** அவரையே ஏற்படுத்தினார்."*

*இந்த வசனத்தில் கிருபாதாரபலி என்ற தமிழ் வார்த்தைக்கான கிரேக்க வடிவமான "ஹிலாஸ்மொஸ்" என்ற வார்த்தையின் குடும்பத்திலிருந்து வரும் "ஹிலாஸ்டேரியன்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழில் அது **கிருபாதாரபலி** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.*

*எபிரெயர் 2:17*

*அன்றியும், அவர் ஜனத்தின் **பாவங்களை நிவர்த்தி** செய்வதற்கு ஏதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது.*

*எபிரெயர் 2:17ல் **கிருபாதாரபலி** என்ற வார்த்தை தமிழ் வேதத்தில் பயன்படுத்தப்படவில்லை. ஆங்கில வேதநூல்களில்* NKJV, NASB, ESV *மொழிபெயர்ப்புகளில் அதுவே பயன்படுத்தப்பட்டுள்ளது. கிருபாதாரபலி என்ற வார்த்தை "ஹிலாஸ்மொஸ்" என்ற கிரேக்க வார்த்தையின் தமிழ் வடிவம். எபிரெயர் 2:17ல் "ஹிலாஸ்மொஸ்" என்ற வார்த்தைக் குடும்பத்திலிருந்து வரும் "ஹிலாஸ்கொமாய்" என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதை* KJV, "Reconciliation" *என்று மொழிபெயர்த்திருக்கிறது. ஆனால்,* NKJV, NASB, ESV *எல்லாமே* Propitiation *(கிருபாதாரபலி) என்று மொழிபெயர்த்திருக்கின்றன. எது சரி?* Propitiation *அல்லது கிருபாதாரபலி என்று மொழிபெயர்ப்பதே சரியானது. தமிழ்வேதம் அந்த வார்த்தையைப் பயன்படுத்தாது "பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக" என்று மட்டும் மொழிபெயர்த்திருக்கிறது. இந்த இடத்தில் கிருபாதாரபலி என்ற வார்த்தை தமிழில் இருந்திருக்க வேண்டும்.*

இனி, கிருபாதாரபலி (Propitiation) என்ற வார்த்தைக்கான பொருளை நாம் ஆராய்வது அவசியம். வேதத்திற்கு புறத்தில், அதாவது, கிறிஸ்தவர்களல்லாதவர்கள் மத்தியில் இந்த வார்த்தைக்கான பொதுவான அர்த்தத்தை முதலில் கவனிப்போம். ஒருவருடைய "சினத்தைத் தணிப்பது" என்ற அர்த்தத்திலேயே இதன் வினைச்சொல் (Propitiate) அவர்களால் பயன்படுத்தப்படுகிறது. தற்கால தமிழ் சொற்பொருளகராதியான "க்ரியா"வில் இந்த அர்த்தத்தைக் காணலாம். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள்கூட இந்த வார்த்தைக்குள், பிரச்சனையோடிருக்கும் இருவரில் ஒருவர் கோபத்தோடிருக்கிறார் என்ற அர்த்தமிருப்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அதுவே இந்த வார்த்தையின் அடிப்படை அர்த்தமாகும்.

நாம் இதற்கு மேல் ஒருபடி போய் வேதத்தில் இது எந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஆராய வேண்டும். இறையியல் வல்லுனரான ஜோன் ஓவன் கிருபாதார பலியில் நான்கு முக்கிய விஷயங்கள் அடங்கியிருப்பதாக எழுதியிருக்கிறார்.

1. செய்யப்பட்ட ஒரு குற்றம் நீக்கப்பட வேண்டும்.
2. குற்றத்துக்கு ஆளானவர் சமாதானப்படுத்தப்பட வேண்டும்.
3. குற்றத்தைச் செய்தவர் குற்றவாளியாக நிற்கிறார்.
4. செய்யப்பட்ட குற்றத்திற்காக பலிகொடுக்கப்பட வேண்டும்.

ஜோன் ஓவனின் இந்த விளக்கம் மிகவும் முக்கியமானது. இவையெல்லாம் கிருபாதாரபலி (Propitiation) எனும் வார்த்தை விளக்கும் உண்மைக்குள் அடங்கியிருக்கின்றன. இந்த விஷயங்கள் யாரைப்பற்றிப் பேசுகின்றன, நடந்த குற்றந்தான் என்ன? குற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பென்ன? குற்றம் செய்தவரின் கதி என்ன? என்பதையெல்லாம் நாம் ஆராய்வது அவசியம். இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நாம் தேடுகின்றபோது குற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறவர் கர்த்தர் என்ற உண்மையை வேதத்தில் இருந்து அறிந்துகொள்ளுகிறோம். அதுமட்டுமல்லாமல் அந்தக்

*குற்றத்தால் அவர் பரிசுத்தமான கடுங்கோபத்தில் இருக்கிறார் என்பதையும் வேதம் விளக்குகிறது. கர்த்தர் பாதிக்கப்பட்டவராக பரிசுத்தமான கோபத்தோடு இருக்கிறார் என்பது கிருபாதாரபலி என்ற பதத்தின் அடிப்படை விளக்கமாக இருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. அதுமட்டுமல்லாமல் அந்தக் கோபத்தை நிவர்த்தி செய்யும் பலியாகவே கிறிஸ்து சிலுவையில் பலிகொடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை கிருபாதாரபலி விளக்குகிறது. கர்த்தர் கோபத்தோடிருக்கிறார் என்பதையும் அதற்குக் காரணமான மனிதன் அவருடைய கோபத்துக்கு ஆளாகியவனாக இருக்கிறான் என்ற அடிப்படை உண்மையை கிருபாதாரபலியில் இருந்து எந்தவிதத்திலும் ஒதுக்குவதற்கு வழியே இல்லை. இந்த உண்மையை ஒதுக்கிவைக்கப் பார்த்தால் கிறிஸ்துவின் சிலுவைப்பலியின் அடிப்படைத் தன்மையை அழித்துவிடுவது போலாகிவிடும்; அவரது சிலுவைப்பலி அதன் பிறகு பாவநிவாரணபலியாக இருக்காது.*

*உண்மை இப்படி இருந்தபோதும் நான் இதுவரை விளக்கியதை சிலர் நிராகரிக்கிறார்கள். பாவிகளாகிய மனிதர்கள் மேல் கர்த்தர் பரிசுத்தமான கோபத்துடன் இருக்கிறார் என்பதை நிராகரிப்பதற்காக அவர்கள் கிருபாதாரபலி என்ற வார்த்தையை சில ஆங்கில வேத மொழிபெயர்ப்புகளில் மாற்றி வேறு வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள்* Propitiation *என்ற வார்த்தைக்குப் பதிலாக* Expiation *என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இவர்களில் சி.எச். டொட் முக்கியமானவர். டொட்டுக்கு கர்த்தர் பெருங்கோபத்துடன் இருக்கிறார் என்ற உண்மை பிடிக்கவில்லை. அதை அவர் "பழங்காலக் கருத்து" என்றும், "பழங்கால எண்ணங்களுக்கு ஒத்துப் போவதாக இருக்கிறது" என்றும் எழுதியிருக்கிறார். அதுமட்டு மல்லாமல் டொட், "இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் அந்தப்போதனை காணப்படவில்லை" என்றும் தைரியமாக எழுதியிருக்கிறார்.*

Expiation *என்ற பதத்தின் பொருளென்ன?* Propitiation *என்ற வார்த்தைக்குப் பதிலாக இந்த* Expiation *என்ற வார்த்தையை ஏன் பயன்படுத்தக்கூடாது?*